**கவனிக்க.-** 2010.08.27 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1670 - 2010 සැප්තැම්බර් මස 03 වැනි සිකුරාදා - 2010.09.03

1670 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1334 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1336 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஐப்பசி மாதம் 04 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆவணி 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | இரத்மலானை | (கரகம்பிற்றிய) இரத்மலானை மேற்குப் பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 12 |
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | வெள்ளவத்தை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 12 |
| கொழும்பு | கொழும்பு | கொட்டாஞ்சேனை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 12 |

9-96

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஐப்பசி மாதம் 04 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆவணி 18.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | யட்டிநுவர கங்கபலாத்த பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் யட்டிநுவர பிரிவில் விவாகம் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | உடுநுவர | கண்டு பலாத்த பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் யட்டிநுவர/உடுநுவர பிரிவில் விவாகம் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

9-104

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஐப்பசி மாதம் 04 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆவணி 17.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | களுத்துறை | களுத்துறை நகரப் பிரிவில் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

9-105

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்தின் பதவிக்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை-2010

இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்தின் 140 வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2010.10.08 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாததும் 30 வயதிற்குக் மேற்படாதது மான (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல) இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2010.10.08 ஆகும். சகல விண்ணப்பப்பத்திரங்களும் அத்தினத்திற்கு முன்பு புகையிரத பொது முகாமையாளருக்கு கிடைக்கும் வகையில், ''புகையிரத பொது முகாமையாளர், புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், த. பெ. 355, கொழும்பு 10'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்பத்திரமாவது தனிப்பட்ட பெயருக்கு அனுப்பிவைத்தலோ அல்லது கையில் கொண்டு பாரம் கொடுத்தலோ கூடாது. பூரணமற்ற, முறையற்ற, தேவையான தராதரங்களை கொண்டிராத முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பப்பத்திரங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பில் இந்நகரத்தையும் அதன் இலக்கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்ந்தெடுப்பை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகையைக் கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

**1 ஆம் அட்டவணை**

பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்கள்

| | |
|---|---|
| கொட்டாஞ்சேனை | 01 |
| மருதானை | 02 |

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்கள் (தொடர்ச்சி)*

| | |
|---|---|
| பொரல்லை | 03 |
| கருவாத்தோட்டம் | 04 |
| பம்பலப்பிட்டி | 05 |
| ஹெவ்லொக் ரவுன் | 06 |
| நுகேகொட | 07 |
| மொரட்டுவ | 08 |
| பிலியந்தல | 09 |
| ஹோமாகம | 10 |
| மஹரகம | 11 |
| ஹங்வெல்ல | 12 |
| அவிஸ்ஸாவெல்ல | 13 |
| நீர்கொழும்பு | 14 |
| மினுவன்கொட | 15 |
| திவுலபிட்டிய | 16 |
| வெயங்கொட | 17 |
| கம்பஹா | 18 |
| ஜா-எல | 19 |
| வத்தள | 20 |
| களணிய | 21 |
| தொம்பே | 22 |
| ஹொரண | 23 |
| பாணந்துறை | 24 |
| களுத்தறை | 25 |
| மத்துகம | 26 |
| அலுத்கம | 27 |
| மாத்தளை | 28 |
| கலேவெல | 29 |
| நாவுல | 30 |
| லக்கல-பல்லேகல | 31 |
| கண்டி | 32 |
| கடுகஸ்தோட்ட | 33 |
| தெல்தெனிய | 34 |
| வத்தேகம | 35 |
| நுகவெல | 36 |
| கலகெதர | 37 |
| கம்பொல | 38 |
| ஹெதுனுவெவ | 39 |
| நுவரஎலிய | 40 |
| வத்துமுல்ல | 41 |
| ஹற்றன் | 42 |
| கினிகத்ஹேன | 43 |
| அம்பலாங்கொட | 44 |
| காலி | 45 |
| பத்தேகம | 46 |
| வெலிகம | 47 |
| மாத்தறை | 48 |
| கம்புறுபிட்டி | 49 |
| ஹக்மன | 50 |
| தெய்யந்துறை | 51 |
| திக்வெல்ல | 52 |
| அக்குரெஸ்ஸ | 53 |
| கொடபொல | 54 |
| பெலியத்த | 55 |
| வலஸ்முல்ல | 56 |
| வீரகெட்டிய | 57 |
| தங்கல்ல | 58 |
| அம்பலந்தோட்டை | 59 |
| ஹம்பாந்தோட்டை | 60 |

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்கள் (தொடர்ச்சி)*

| | |
|---|---|
| திஸ்ஸமஹாராம | 61 |
| சாவகச்சேரி | 62 |
| யாழ்ப்பாணம் | 63 |
| தெல்லிப்பழை | 64 |
| பருத்தித்துறை | 65 |
| மன்னார் | 66 |
| முருங்கன் | 67 |
| முல்லைத்தீவு | 68 |
| வவுனியா | 69 |
| கந்தளாய் | 70 |
| திருகோணமலை | 71 |
| மூதூர் | 72 |
| பதவிய பராக்கிரமபுர | 73 |
| கிண்ணியா | 74 |
| மட்டக்களப்பு | 75 |
| ஏறாவூர் | 76 |
| காத்தான்குடி | 77 |
| அம்பாறை | 78 |
| சேரங்கடை | 79 |
| கல்முனை | 80 |
| அக்கரைப்பற்று | 81 |
| சம்மாந்துறை | 82 |
| வென்னப்புவை | 83 |
| மாதம்பை | 84 |
| சிலாபம் | 85 |
| புத்தளம் | 86 |
| குளியாப்பிட்டி | 87 |
| பிங்கிரிய | 88 |
| நாரம்மல | 89 |
| பொல்கஹவளை | 90 |
| குருநாகல் | 91 |
| இப்பாகமுவ | 92 |
| தொடம்கஸ்லந்த | 93 |
| மொரதிஹ | 94 |
| நிக்கவரட்டிய | 95 |
| மாஹோ | 96 |
| மதவச்சி | 97 |
| கெக்கிராவ | 98 |
| அனுராதபுரம் | 99 |
| கலேன்பிந்துனுவெவ | 100 |
| கஹடகஸ்திகிலிய | 101 |
| பொலன்னறுவை | 102 |
| ஹிங்குராக்கொடை | 103 |
| பண்டாரவெல | 104 |
| வெலிமட | 105 |
| பதுளை | 106 |
| பஸ்ஸர | 107 |
| மஹியங்கனை | 108 |
| ஹிராதுருகோட்டை | 109 |
| ஹஸலக | 110 |
| மொணறாகலை | 112 |
| பிபில | 111 |
| வெல்லவாய | 113 |
| கேகல்ல | 114 |
| றம்புக்கன | 115 |
| மாவனெல்லை | 116 |
| ருவன்வெலை | 117 |
| எஹெலியகொடை | 118 |

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்கள் (தொடர்ச்சி)*

| | |
|---|---|
| இரத்தினபுரி | 119 |
| பெல்மடுள்ள | 120 |
| பலாங்கொடை | 121 |
| கலவான | 122 |
| எம்பிலிபிட்டி | 123 |
| கிளிநொச்சி | 124 |
| பளை | 125 |

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- புகையிரத நிலைய அதிபர்- தரம் III

2. **பதவியின், கடமையின் சுபாவம்**.- இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழுள்ள புகையிரத நிலையங்களின் செயற்பாடு களுக்கு ஏற்புடைய புகையிரத முகாமையாளரின் பிரதிநிதியாக செயற்பட்டு புகையிரத முகாமையாளரினால் குறிப்பாக ஒப்படைக் கப்படும் ஆள், நிருவாகம், நிதி, வாணிப நடவடிக்கை கூட்டிணைப்புச் செயற்பாடு, இயக்க நடவடிக்கை, பிரவேசப்பத்திரமும் அதன் கணக்கீடுகளும் உள்ளடங்கலாக பலதரப்பட்ட சுரூபங்களையுடைய கடமைகளைச் செய்தல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- அ. நி. சு. 06/2006 (iv) இன்படி எம்என்-3-2006-ஏ

ரூபா 15,005-4 x 180-6 x 240-11 x 320-20 x 360-27,885

4. (அ) ***கல்வித் தகைமைகள் :***

(I) க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் உடன் கணிதம் மற்றும் வேறு விடயங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்

உடன்

(II) புதிய விடய சிபார்சின்கீழ், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மூன்று விடயங்களில் (03) (பொதுவான பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பழைய விடய சிபார்சின்கீழ் மூன்று (03) விடயங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(II) ***உடற்தகுதி :***

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிர தேசத்திலும் சேவை புரிவதற்கான சகல உடற்தகுதி களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்ளக்கூடியளவுக்கு போதுமான உடற்தகுதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், நெஞ்சளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) 6/6 அளவுள்ள கண் பார்வை பரிசோதனையிலும் தகுதிபெறல் வேண்டும்.

(III) ***வேறு தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப் பிக்க முடியும்.

(iv) ***தராதரங்களை பெற்றிருக்கவேண்டிய திகதி***.- பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தேவையான தராதரங்களை கொண்டுள்ளதாக கருதப்படுவது விண்ணப்பதாரி இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று சகல தகுதிகளையும் பெற்றிருந்தால் மாத்திரமாகும். தராதரங்களை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி சான்றிதழ்களின் புகைப்பட பிரதி விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேலுள்ள (04) பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சை நடாத்தி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சை உள்ளடக்கம் :**

(i) இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும்.

(ii) *பரீட்சை முறை :*

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) சகல கேள்விகளுக்கும் தோற்ற முடிவது மேற்குறிப் பிட்ட (04) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழிமூலம் மாத்திரமாகும். தேர்ந்தெடுத்த மொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) *பரீட்சை விடயங்கள் :*

(அ) மொழித்தேர்ச்சி

(ஆ) நுண்ணறிவு

**விடய உள்ளடக்கம் :**

(அ) மொழித் தேர்ச்சி (காலம் : 1 மணி 30 நிமிடம்) - முழுப்புள்ளி 100 ஆகும்.

இக்கேள்வித்தாள் இரு பிரிவுகளைக் கொண் டுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

*I* ஆம் பிரிவு.-இப்பிரிவில் கட்டுரையும் சுருக்கமும் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

*II* ஆம் பிரிவு.-மொழி பற்றி விண்ணப்ப தாரியின் புரிந்துகொள்ளுதலை பரிசீலிக் கும் பொருட்டு அம்சங்கள் பலவற்றைக் கொண்டு இரண்டாம் பிரிவு உள் ளடக்கப்பட்டிருக்கும். இவ்வம்சங்கள் வாயிலாக கீழ் கோடிடப்பட்டுள்ள சொற் றொடரின் கருத்தை தனி வாக்கியத்தில் கூறுமாறு அல்லது அதுபற்றி விரிவான குறிப்பு எழுதுமாறு அல்லது வழங்கப்பட் டுள்ள கேள்விக்கு தரப்பட்டுள்ள விடை களின் மத்தியில் மிகச்சரியான விடையை தேர்ந்தெடுக்குமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுவார்கள்.

(ஆ) நுண்ணறிவு.- (காலம் 1 மணி)

- முழுப்புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான ஆற்றலையும் விவரிக்கும் ஆற்றலையும் சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் பொது அறிவையும் புத்திக்கூர்மையையும் அளவிடும் வகையில் இக்கேள்வித்தாள் அமையப் பெற்றிருக்கும். இது கணித குளறுபாடுகள் பொது பொது அறிவு, சுற்றாடல் சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கொண்ட கோடிடும் அல்லது சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் கேள்வித் தாளாகும்.

***தேர்ந்தெடுக்கும் முறை.-*** ஒவ்வொரு விடயத்திலும் தகுதிபெறுவதற்காக 50 புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். இப்பரீட்சையில் இரு விடயங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தராதரங்கள் பரிசீலனை செய்யப்படும். இந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. தராதரங்களைப் பெற்றுள்ள இரு கேள்வித்தாளுக்கும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் மேலுள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப புகையிரத நிலைய அதிபர் - III ஆம் வகுப்பின் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

7. **விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல்.**- (i) விண்ணப்பப்பத்திரத்தை ஏ-4 (துட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில்-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 10 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 11 இலிருந்து 13 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் கையொப்பத்தை உறுதிப்படுத்தலும் திணைக்கள/நிறுவன தலைவரின் உறுதிப்படுத்துதலும்

உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக்கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாவென்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரத்தை தயாரிக்கும்போது தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். அதை உமக்கு வசதியான தபால் அலுவலத்தில் செலுத்த முடியுமாகும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட காசுக்கட்டளையை கழன்றுவிடாதவாறு விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இக்காசுக்கட்டளையின் புகைப்பட பிரதியை இணைத்தல் விண்ணப்பப்பத்திரத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். காசுக்கட்டளை புகையிரத பொது முகாமையாளர் எனும் பெயருக்கு மருதானை தபால் அலவலகத்தில் மாற்றக்கூடியவாறு பெறப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்பத்திரத்துடன் எச்சான்றிதழ்களினதும் உண்மைப் பிரதி இணைத்து அனுப்பக்கூடாது. அவ்வாறு அனுப்பப்படும் உண்மையான பிரதி சம்பந்தமாக எவ்வித பொறுப்பையும் திணைக்களம் ஏற்காது.

(iv) விண்ணப்பப்பத்திரத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் - III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை-2010" எனவும் நீர் பரீட்சைக்கு தோற்ற தேர்ந்தெடுத்த நகரத்தையும் அதன் இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(v) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், அ. நி. சு. இல. 06/2006 இன்படி ரூபா 19,755 ஆன மாதாந்த ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(vi) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர்களின் கையொப்பத்தை தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்பத்திரம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் இப்பதவிக்கு விண்ணப்பதாரி தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்மானி அறிவித்தலின்படி தராதரங்களைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை என தெரியவருமிடத்து அவ்விண்ணப்பதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச்செய்யப்படும்.

(viii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு பிறகாவது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும். நீர் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியையும் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியான பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்தையும் உம்முடன் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்தல் மிகவும் பயனுடையதாகவிருக்கும். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காக வேண்டி

ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆள் அடையாள அட்டை அல்லது அனுமதிக்கப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமாகும்.

(x) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தராதரங்களை பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

(xi) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாகும். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

8. **சேவை நிபந்தனை**.- III ஆம் வகுப்பு புகையிரத நிலைய அதிபர் தரத்தின் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் 3 வருட கால தகுதிகாண் காலவெல்லைக்கு உட்பட்டவர்களாகும். III ஆம் வகுப்பு புகையிரத நிலைய அதிபர் தரத்தின் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 3 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை தடைதாண்டு பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். தகுதிகாண் காலவெல்லைக்குள் புகையிரத பயிற்சி பாடசாலையில் 6 மாதகாலம் புகையிரத நிலைய அதிபர் சேவையின் சட்டதிட்டங்களும் தொழில்சார் பயிற்சிகளும் வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்.

9. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை**.- (i) இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவை யினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க பொது நிருவாக சுற்றுநிருபம் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும் திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும்.

பி. பி. விஜேசேகர,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
2010.08.19 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(இதன்படி ஏ-4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பு விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலை நன்றாக வாசித்து புரிந்துகொள்ளவும்.)

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் நகரம் :

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |

(பரீட்சை அறிவித்தலின் முதல் பந்தியைப் பார்க்கவும். விண்ணப் பித்த நகரத்தை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III பதவிக்கு வெளிவிண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை - 2010**

Written Competitive Examination for Recruitment of External Candidates for the Post of Station Master, Class III - 2010 - Department of Railways - Sri Lanka

1. முதலெழுத்துக்களை கடைசியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
   (உதா : PERERA, R. M.)
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. நிரந்தர முகவரி :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
5. ஆண்/பெண் தன்மை :—
   பெண் - 1
   ஆண் - 0 [ ]
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)
6. வதிவிடம் :
   (i) கிராமசேவையாளர் பிரிவும் இலக்கமும் :————.
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
   (iii) மாவட்டம் :————.
7. இனத் தொகுதி :
   சிங்களம்-1, இலங்கைத் தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, மலே-6 [ ]
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)
8. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
   சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4 [ ]
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)
9. பிரசா உரிமை (பொருத்தமான கூட்டுக்குள் "✓" அடையாளத்தை இடவும்.) :–
   பரம்பரை மூலம் [ ] பதிவு மூலம் [ ]
10. (i) பிறந்த திகதி :–
    ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]
    (ii) 2010.10.08 ஆந் திகதியன்று வயது :–
    வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

11. கல்வித் தராதரம் :

(i) க. பொ. த. (சா. தரம்) :

சுட்டெண் :————, வருடம் :————.

| இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |
| (v) | | |
| (vi) | | |
| (vii) | | |
| (viii) | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) :

சுட்டெண் :————, வருடம் :————.

| இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| (i) | | |
| (ii) | | |
| (iii) | | |
| (iv) | | |

12. நீர் எப்போதாவது எந்த குற்றத்திற்காகவோ நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுள்ளீரா ? ஆம் எனின் விபரம் தருக :

ஆம் ☐ இல்லை ☐

13. **விண்ணப்பதாரியின் வெளிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்பத்திரத்தில் தன்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதெனவும் தெரிவிப்பதுடன் இதில் எப்பகுதியாவது பூரணப்படுத்தப்படாததினால் உடன்/அல்லது பிழையான முறையில் உடன்/அல்லது பொய்யான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் தனது போட்டித் தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதையும் நான் நன்கு அறிவேன் என்றும் அதன் பிரதிபலனை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கிறேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் பொய்யான தென தான் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப் பட்டதன் பிறகு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் ஏற்படும் பிரதிபலனை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) .............................. தபால் அலுவலகத்திற்கு ரூபா 250 ஐச் செலுத்தி பெற்றுக்கொண்ட இலக்கம் ................................ உடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| காசுக்கட்டளையை இங்கு இணைக்கவும்.<br>(ஒட்ட வேண்டாம்) |

(ஈ) இப்பரீட்சை நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயற்பட இணங்கிக் கொள்கிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ அவர்களை நான் நன்றாக அறிவேன் என்றும் அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.
(தயவுசெய்து இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

15. திணைக்கள/நிறுவன தலைவரின் உறுதிப்படுத்துகை :
(தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர் களுக்கு மாத்திரம்)

மேலுள்ள விண்ணப்பப்படிவத்தை முன்வைத்துள்ள திரு. .................................... அவர்கள் ............................... இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ................................. ஆந் திகதியிலிருந்து .......................... இதுவரை .............................. ஆக சேவை செய்கின்றார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் இல்லை/உண்டு. அவரின் சேவை நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானதாகும்/திருப்திகரமற்ற தாகும். குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள தெனவும் அக்காசுக் கட்டளை இணைக்கப்பட்டுள்ளதெனவும் அவர் புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்தி லிருந்து/நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
திணைக்கள/நிறுவன தலைவரின்
கையொப்பம்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

## இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2010

2009.09.24 ஆந் திகதிய 1620/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைப் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2010, திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படுவதுடன், இப்பரீட்சை பெறுபேறுகளின் படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள், இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்காக தெரிவுசெய்யப்படுவார்கள்.

3. நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

4. **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (iv) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஏற்புடையதான சம்பளத் தொகுதி எம்என் 3-2006-ஏ ஆவதுடன் மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 ஆகும்.

5. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

6. **தகைமைகள்**.- இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்குறிப்பிடும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) இலங்கை பிரசை ஆதல் ; அத்துடன்,

(ஆ) விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளில் ஒன்றிற்கு திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்,

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் அடங்கலாக வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் (இவற்றுள் 5 பாடங்களை ஒரே அமர்வில் சித்தியடைய வேண்டுமென்பதுடன் 4 பாடங்களுக்கு திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பிரதான பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியினை சித்திபெற்றிருத்தல் அல்லது

(ii) இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- (i) சகல விண்ணப்பதாரிகளும் பதவிகளுக்கு ஏற்புடைய தான சகல தகைமைகளையும் 2010, ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமாகும்.

(ii) இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு மூன்று அமர்வுகளுக்கு மேல் தோற்றுவதற்கு எவரொருவருக்கும் அனுமதி கிடையாது.

7. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று வினாத்தாள்களை கொண்டமைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| பாடம் | புள்ளிகள் | மணித்தியாலங்கள் |
|---|---|---|
| நூலகவியல் | 100 புள்ளிகள் | 3 மணித்தியாலங்கள் |
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம் |
| பொது அறிவு | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம் |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்குறிப்பிட் டுள்ளவாறாகும் :-

7.1 நூலகவியல்.- (1) நூலகங்களும் நூலகத்துவமும் :

(அ) நூலகங்களும் நூலக வரலாறும், நவீன மற்றும் புராதன உலகத்தின் பிரதான நூலகங்கள் ;

(ஆ) எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்க லானதுமான எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும், பரிமாண வளர்ச்சியும் ;

(இ) அச்சிடற்றொழில் நுட்பத்தின் ஆரம்பமும் விரிவாக்க மும், நூலக சமூக அபிவிருத்தி விடயங்கள் மீதான செயல்விளைவுகளும் ;

(ஈ) நூல் நிலைய வகைகள் :

(i) விசேட நூலகங்கள்.- அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்கள் சார்ந்த நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்களின் அமைப்பு, வேலைப்பழு மற்றும் பணிகள் ;

(ii) கல்விசார் நூலகங்கள்.- பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூல் நிலையங்களின் அமைப்பும், வேலைப்பழு மற்றும் பணிகள் ;

(iii) பாடசாலை நூலகங்கள் ;

(iv) பொது நூலகங்கள் ;

(v) பிரிவென நூலகங்கள் மற்றும் துறவிமட/சமய நிறுவனங்களின் நூலகங்கள்

(vi) நூலகக் குழுக்களின் அமைப்பு, தேவைப்பாடு முக்கியத்துவம் மற்றும் வேலைப்பழு

(vii) நூலக தொழிலுக்குரிய கற்றறிந்தோர் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் வேலைப்பழு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் (இலங்கை, இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா)

(viii) நூல் நிலையக் கட்டிடங்கள்.- திட்டமிடல், கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் :

* தற்போதுள்ள கட்டிடமொன்றின் நூலகம் ஒன்றை தாபித்தல், அமைத்தல் அல்லது மேம்படுத்தல்

(ix) நூலகப் பொருட்களைப் பராமரித்தல், பேணிப் பாதுகாத்தல் (conservation) மற்றும் காப்பீடு (preservation)

(x) இடர்களும் (Disasters) இடர் முகாமைத்துவமும் (Disaster management)

(2) அறிவும் தகவல்களை ஒழுங்கமைத்தலும் :

(அ) நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் நன்மைகளும்

(ஆ) இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத் திட்டங்கள் துயி தசமதான பகுப்பாக்கத் திட்டங்கள், சர்வதேச தசமதான பகுப்பாக்கத் திட்டம்

(இ) நூலக பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக்கோவை (AACR) முறையும்

(ஈ) நூல்களைப் பற்றிய விபரங்கள்

(உ) (AACRS2) விதிமுறைகளைப் பயன்படுத்தி பதிவுப்பட்டியல் தயாரித்தல்

(3) நூல் நிலைய வளங்களும் தகவல் சேவையும் :

(அ) பலவகையான நூலக வளங்கள்

(ஆ) சேர்ந்த அபிவிருத்தி, சேர்ந்த அபிவிருத்தி கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவமும்

(இ) நூலக வளங்களை தெரிவுசெய்தல் அடங்கலான ஏற்பு செயற்பாடுகள்

(i) நூலக வளங்களை தெரிவுசெய்தலின் கோட்பாடுகளும் மூலகங்களும்
(ii) ஏற்பு செயற்பாடுகள், தளக்கோளம் உட்பட பல்வகையான தொழில்நுட்பச் சேவைகள்
(iii) இருப்புக்களை மீளாய்தலும் அகற்றும் செயற்பாடும்

(ஈ) வெளியீடும் வெளியீட்டு உரிமையும், தடையும்

(உ) நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் (Current Awareness Service)

(ஊ) வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

(எ) மக்கள் தொடர்பும் நூலகங்களுக்கான பிரசாரங்களும்

(4) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information Communication Technology)

(அ) நூலகங்களில் கணனிகளை பயன்படுத்தலும், நூலக நடவடிக்கைகளின்போது தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவமும் உற்பத்திப் பெருக்கமும்

* மேற்படி 4 துறைகளும் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் அமைவு முறையிலான கட்டுரை, கட்டுரை முறையிலான கட்டாய வினாக்களை கொண்டமைந்த வினாத்தாளாகும்.

7.2 நுண்ணறிவுத் தேர்வு.- சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்துகொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திகூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* பல்விருப்பு மற்றும் சுருக்கமான பதில் எழுதவேண்டிய 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும்.

7.3 பொது அறிவு.- தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத் துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* பல்விருப்பு மற்றும் சுருக்கமான பதில் எழுதவேண்டிய 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும்.

நியமனத்திற்காக தகைமைகளை பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பதையாவது (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை பூர்த்திசெய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையை கட்டாயமாக கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-20-13 இன்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கோ அல்லது மாவட்ட செயலகத்திற்கோ செலுத்தலாம். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தம்வசம் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் காசுக்கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21 x 29 cm) சாதாரண ஹாப்ஷீட்) அளவிலான கடதாசியை உபயோகித்து,

(அ) இலக்கம் 1 முதல் 3 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 4 முதல் அதனடுத்துவரும் பந்திகள் மறுபக்கங் களிலும் உள்ளடங்கும் வண்ணம் கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகப்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதும் மொழியிலேயே விண்ணப்பம் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார்செய்துகொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவை யும் சரியாகப் பூர்த்திசெய்யாது முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக் கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யத் தவறுவதால் ஏற்படும் இழப்பிற்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாளிகளாவார்கள். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதா கும். பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப் பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

9.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங் களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்க வில்லையென அறிய வருமிடத்து அவர்களின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும்.

9.2 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010" என்று குறிப்பிடவும்.

9.3 விண்ணப்பபடிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்ப மானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், ரூபா 2,40,360 ஆண்டுச் சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.

9.4 முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2010, ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்களிடத்திலுள்ள விண்ணப்பப்படிவம் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகள், பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்பிவைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கை கடிதம் போன்றவற்றை உங்கள்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப்பயனுள்ளதாகும்.

11. பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடி யான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. **பொய்யான தகவல்களுக்கு தண்டனை**.- விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்திசெய்யும்போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப் பத்திலும் அவர் அரச சேவையி லிருந்து நீக்கப்படலாம்.

13. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

14. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுபற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால்

தீர்மானிக்கப்படும். பரீட்சார்த்திகள் யாவரும் இவ்வர்த்தமான பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களின்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

பீ. பி. பி. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2010, ஓகத்து 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO CLASS III OF SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE - 2010

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீட்டையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்)
பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----. உதாரணம் : SILVA, A. B.)

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் : பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.3 2010, ஒற்றோபர் 4 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் (முதல் அமர்வில்) :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் (இரண்டாவது அமர்வில்) :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.4 பரீட்சை அறிவிப்பில் 6.0 பந்தி (ஈ) பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக நீங்கள் நூலகவியல் தொடர்பாக பெற்றுள்ள மூன்று வருடகால டிப்ளோமா தொடர்பான விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(ii) டிப்ளோமா :----.
(iii) ஆண்டு :----.

5. வேறு தகைமைகள் :-------------------------------------
-----------------------------------------------------
-----------------------------------------------------.

6. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச் சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடவும்.)

ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :-

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய பணம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) |

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யாதிருத்தல் மற்றும்/ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகப் பூர்த்திசெய்திருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகிறேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ......................... ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

9-171

---

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2010

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2010 திசெம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கிறேன்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் இலக்கம் 1225/ 32 கொண்ட 2002.03.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக இப்பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பரீட்சை ஒழுங்குமுறைகள் :

(அ) முதலாவது வினைத்திறன் பரீட்சைக்குக் கீழ்க்குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்குகின்றன :-

| | |
|---|---|
| பாட இலக்கம் 1 | பொது நிர்வாகம்.- இலங்கை அரசியல் யாப்பு தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், அரசின் ஏனைய ஒழுங்கு கோவைகள் |
| பாட இலக்கம் 2 | நிதி |
| பாட இலக்கம் 3 | கல்வி, கல்விச்சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை |

(ஆ) உத்தியோகத்தருக்கு 1 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரு தடவையில் அல்லது தனித்தனியான தடவைகளில் தோற்ற முடியும்.

(இ) சகல வினாத்தாள்களுக்கும் 3 மணித்தியாலங்கள் வழங்கப்படும்.

3. **பாடத்திட்டம் :**

(1) பொது நிர்வாகம் :

(அ) இலங்கை (அரசியலமைப்பு) அரச கட்டளை 1946 மற்றும் 1947 (379 ஆவது வாசகம்)
1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் (347 ஆவது வாசகம்)
1972 மே 22 ஆந் திகதி விதித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பு
1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களை பதிவுசெய்யும் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான சட்டம்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு

(ஆ) அலுவலக மற்றும் துறைசார் ஒழுங்கமைப்பு செயற்பாடுகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள், அரசின் ஏனைய ஒழுங்குக் கோவைகள்
தாபனவிதிக்கோவையின் வாசகங்கள்
I, II, III, IV, V, VI, VII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(2) நிதி :

(அ) அரச நிதிக்கோவை 1 ஆவது பிரிவு (1 ஆவது வசனத்தைத் தவிர)

(ஆ) நடப்பு ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம், உதாரணம் : அவற்றின் அமைப்பு, வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்
(இ)கல்வி அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் உரிய கணக்கு செயற்பாடுகள் கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய சட்டக் கொள்கைகள்

(3) கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

(அ) கல்விச் சட்டம்.– பரீட்சார்த்தி கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்டம் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும் :

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க மறுசீரமைப்புக் கட்டளைச் சட்டம்
* 1951 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மறுசீரமைப்புச் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க மறுசீரமைப்புச் சட்டம்
* அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு
* 1960 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டம்
* 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டம்
* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப்பெயரை மாற்றி அமைத்தல்) சட்டம்
* 1979 இலக்கம் 64 ஆம் இலக்க பிரிவேனாச் சட்டம்
* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள்– மறுசீரமைப்புச் சட்டம்)
* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்

(ஆ) கல்வி நிருவாகம் :

(1) கல்வி அமைச்சின் கொள்கை :

(i) மாவட்ட கல்வி அமைச்சு, திணைக்களம் உட்பட அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் பணிகள்

(ii) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்வித் திட்டமிடல் நோக்கம், முறைகள் (பாடசாலைத் திட்டமிடல் உட்பட) அமுல்படுத்தல்

(2) பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூக தொடர்பாடல்

(3) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை

(4) விசேட கல்வி வேலைத்திட்டம்

(இ) கல்வி மேற்பார்வை :

* பாடசாலை மேற்பார்வைகளுக்கான திட்டங்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீட்டுக்காக பயன்படுத்தும் விதிமுறைகள்
* பாடசாலைகளின் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டம்
* பாடசாலைகளின் சுய மதிப்பீட்டு வேலைத் திட்டம்
* மாவட்டம், திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலைகளை மேற்பார்வை செய்தல்
* வெளிக்குழு மூலம் உள்ளக மதிப்பீட்டு மேற்பார்வை

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை, கைந்நூல் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக சிறந்த விளக்கத் தைப் பெற்றுக்கொள்ளுமாறு பரீட்சார்த்தி களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.)

பரிந்துரை செய்யப்பட்ட நூல்கள் மற்றும் வெளியீடுகள் :

* கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவனம் (1970)

* கல்வி நிருவாகம் தொடர்பான புதிய முகாமைத்துவ கலைத்திட்டங்கள்
* கருத்தரங்கு அறிக்கை - புதுடில்லி
* பரி மற்றும் டை (1975) பாடசாலைகளை நடாத்திச் செல்வது தொடர்பான டெம்பள் ஸ்மித் லண்டன்
* புஷ் டி கிளைடர் ஆர் குட் மற்றும் சீ ரிவஸ் (1980) பாடசாலைகள்
* முகாமைத்துவ ஒழுங்குவிதிமுறைகள் - ஹாபர் மற்றும் றோ
* கலாநிதி கான் மொஹிதீன் செரீப் (1983)
* பாடசாலை நிர்வாகம் (புதுடில்லி)
* கல்வி அமைச்சின் இலங்கையில் கல்வி (1969)
* கல்வி மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் நூற்றாண்டுக் குழு II மற்றும் III ஆம் பகுதி
* திறந்த பல்கலைக்கழகம் (1981) பாடசாலைகளின் கொள்கைகளை வகுத்தல், ஒழுங்கமைப்பு மற்றும் தலைமைத்துவம் (ஈ 323 பாடநெறியின் நான்காவது பகுதி), திறந்த பல்கலைக் கழக யுனிவேர்சிடி பிரஸ், லண்டன், சிப்னே, ரேடன் (1983) பாடசாலை மதிப்பீடு ஹய்ஸ்மன் கல்வி நூல், லண்டன், கல்வி அமைச்சின் முகாமைத் துவ மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கை - 1984

4. சித்திக்காக ஒவ்வொரு பாடங்களிலும் மொத்தப் புள்ளிகளில் 40% பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. **பரீட்சையின் மொழிமூலம்** :

(i) பரீட்சார்த்திக்கு அரச கரும மொழி அல்லது தேசிய மொழி ஆகிய ஏதேனும் ஒன்றின் மூலம் தோற்ற முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைய முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சை மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்துகொண்டது தொடர்பில் அரச சேவைக்குப் பிரவேசிக்க தகைமைபெற்ற பரீட்சையில் தோற்றிய மொழிமூலம் பதிலளிக்க முடியும்.

6. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாகத் தெரியவரும் இடத்து அவரின் பரீட்சார்த்த அந்தஸ்து இரத்துச்செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

7. விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசி மூலம் தயாரிக்கப்பட வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1 தொடக்கம் 6 வரையான வாசகத்தை 1 ஆவது பக்கத்திலும் எஞ்சியதை 2 ஆவது பக்கத்திலும் குறிப்பிடவும்.) சிங்கள விண்ணப்பப்படிவங்களில் பரீட்சையின் பெயரைச் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்தில் குறிப்பிட வேண்டும். தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலம் குறிப்பிடப்பட வேண்டும். உரிய தகவல்களை தமது கையெழுத் துக்களால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரிப்படிவத்திற்கு ஒவ்வொத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாகப் பூர்த்திசெய்யாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தல் தொடர்புபட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரியினால் கருத்திற்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கருத்திற்கொள்ளவும்.

8. பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவது டன் பரீட்சை நடாத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்கு களுக்குப் பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். பரீட்சைக்கான சட்டங்கள் இவ்வறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

9. விண்ணப்பப்படிவம், 2010, ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் "பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலினூடாக அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடப்படல் வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்ட வுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதியுடன் பதிவுசெய்த பட்டுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட தங்களது கோரிக்கைக் கடிதத்தை தாங்கள் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகச் சிறந்ததாகும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முழு முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம்.

11. மேற்கூறப்பட்ட (09) ஆம் வாசகத்தில் கூறப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்ய தவறும் பரீட்சார்த்தியினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை உறுதிசெய்வ தற்காக சாட்சியை சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் இதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளில் பின்வரும் அடிப்படையில் பரீட்சைக் கட்டணம் அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது : "உரிய பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்பட வேண்டும் எனவும் நாட்டிலுள்ள ஏதாவதொரு மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்தில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒரு பாகத்தை மட்டும் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றைத் தாங்கள் வைத்திருப்பது பிரயோசனப்படலாம்)".

(அ) முதல் தடவை (முழுப்பரீட்சைக்கும் அல்லது வகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.)
(ஆ) அதன் பின்னர் ஒவ்வொரு தடவைக்கும்

| | |
|---|---|
| முழுப்பரீட்சைக்கும் | ரூ. 1,000 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 500 |

14. பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை அனுப்பப்படுவது அவர் இப்பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொண்டல்ல என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

சுனில் எஸ். சிரிசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பத்தரமுல்லை,
பெலவத்தை.
19.08.2010.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

First Efficiency Bar Examination For Officers in Class III of The Sri Lanka Educational Administrative Service

(பரீட்சை ஆணையாளர் நாயகம், பெலவத்தை, பத்தரமுல்லை, பரீட்சைத் திணைக்களத்திற்கு திணைக்களப் பொறுப்பாளர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்புவதற்காக)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : உதாரணம் : SILVA S. A :----.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. முகவரி :

(i) அலுவலக முகவரி :----.
(ii) சொந்த முகவரி :----.
(iii) பரீட்சை அனுமதிப்பத்திரத்தை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆவது வாசகத்தின் (அ) இன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள பாட இலக்கத்தைக் கொண்ட பாடங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

பாட இலக்கம் [ | ] பாடம் :
பாட இலக்கம் [ | ] பாடம் :
பாட இலக்கம் [ | ] பாடம் :

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

5. பிறந்த திகதி :

ஆண்டு [ ] மாதம் [ ] திகதி [ ]

6. (i) பதவிப்பெயர் :----.
(ii) திணைக்களம்/வலயக்கல்வி அலுவலகம்/கோட்டக்கல்வி அலுவலகம்/பாடசாலை :----.

7. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது பகுதி அளவு தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழி மூலத்தைக் குறிப்பிடவும் :

| ஆண்டு | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |

8. மேலே குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானது என்றும் மேற்கூறப்பட்ட 6 ஆவது வாசகத்தில் கூறப்பட்டுள்ள மொழி மூலமாக இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை இருப்பதாகவும் பரீட்சை தொடர்பில் உள்ள சகல சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் இத்தால் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கிறேன்.

9. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :

நிதி செலுத்திய பற்றுச்சீட்டினை ஒட்டவும்.
(போட்டோ பிரதியை வைத்துக்கொள்ளவும்.
உரியதாயின் மாத்திரம்)

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கிறேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளார் என்றும் 6 ஆவது வாசகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளார் என்றும் உறுதி செய்கிறேன்.

நிதி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன். (*)

----,
திணைக்களப் பொறுப்பாளர் கையொப்பம்,
பதவிப்பெயர் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

(*) கட்டணம் செலுத்துவதற்கு அவசியமற்றதாயின் இரத்துச் செய்யவும்.

9-208

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம்** :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2010**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2010 |
| | | வியாழன் | 09.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2010 |
| | | வெள்ளி | 17.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2010 |
| | | வெள்ளி | 24.09.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.09.2010 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2010 |
| | | வெள்ளி | 08.10.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.09.2010 |
| | | வெள்ளி | 15.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2010 |
| | | வியாழன் | 21.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2010 |
| | | வெள்ளி | 29.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2010 |
| **நவெம்பர்** | .. | வியாழன் | 04.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 21.10.2010 |
| | | வெள்ளி | 12.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.10.2010 |
| | | வெள்ளி | 19.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.11.2010 |
| | | வெள்ளி | 26.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.11.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*